சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் தமிழக முதல்வரின் தமிழ்ப் புதல்வன் திட்டத்தினை கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் துவக்கி வைத்தார். உடன் மாவட்ட ஆட்சியர் திருமதி ஆஷாஅஜித், எம்.எல்.ஏக்கள்.எஸ்.மாங்குடி, தமிழரசி ரவிக்குமார் ,,காரைக்குடி நகர்மன்ற தலைவர் எஸ்.முத்துதுரை,துணைத். தலைவர் என்.குணசேகரன்,, திருப்புவ னம் பேரூராட்சி மன்றத்தலைவர் த.சேங்கைமாறன்,,காஞ்சிரங்கால் ஊராட்சி மன்றத் தலைவர் கே.எஸ்..எம்.மணிமுத்து உட்பட அதிகாரிகள் கலந்து கொண்டார்கள்.

பிரதமரின் வீட்டு வசதி- நகர்ப்புற திட்டத்தை சீரமைக்கும் திட்டம் உள்ளதா?

மக்களவையில் – தமிழச்சி தங்கபாண்டியன் கேள்வி!

புதுடெல்லி, ஆக. 10 -

பிரதமரின் வீட்டு வசதி- நகர்ப்புற திட்டத்தை சீரமைப்பது குறித்து, தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் மக்களவையில் கேள்வி எழுப்பினார்.

அதன் விபரம் வருமாறு: -

கேள்வி : அ. பிரதமரின் வீட்டு வசதி- நகர்ப்புற திட்டத்தை ஒன்றிய அரசு சீரமைக்கிறதா? சீரமைக்கிறது என்றால் அதன் விவரம்?

ஆ. தமிழ்நாட்டில் விலங்குகள், சுற்றுச்சூழலை பாதிக்கும் காலநிலை மாற்றம், பேரிடர் அபாய காரணிகளை ஒன்றிய அரசு பரிசீலித்து வருகிறதா?

இ. பிரதமரின் வீட்டு வசதி-நகர்ப்புறதிட்டத்தின் கீழ், மடிப்பாக்கம், சுண்ணாம்பு கொளத்தூர், பெரும்பாக்கம் பகுதிகளில் கடந்த ஆண்டு கட்டப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை? எவ்வளவு? ஈ. சீரமைக்கப்பட்ட பிரதமரின் வீட்டு வசதி- நகர்ப்புற திட்டத்தின் கீழ்

மடிப்பாக்கம், சுண்ணாம்பு கொளத்தூர், பெரும்பாக்கம் பகுதிகளில் கட்டப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை எவ்வளவு?

ஒன்றிய வீட்டுவசதி, நகர்புற விவகாரங்கள் துறை இணையமைச்சர்

தோக்கன் சாஹு அளித்த பதில் வருமாறு: -

நிலம் மற்றும் குடியிருப்புகள் ஆகியவை மாநில அரசு செயல்படுத்தக் கூடியவை. எனவே, தங்களது குடிமக்களுக்காக வீட்டுவசதி தொடர்பான திட்டங்களை செயல்படுத்துபவை மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்கள். எனினும், பிரதமரின் நகர்ப்புற வீட்டுவசதித் திட்டத்தின்கீழ் மத்திய நிதியுதவியை வழங்கி மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்களின் முயற்சிகளுக்கு மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம் உதவி வருகிறது. இதில், நாடு முழுவதும் தகுதிவாய்ந்த அனைத்து நகர்ப்புற பயனாளிகளுக்கும் அடிப்படை வசதிகளுடன்கூடிய கான்கிரீட் வீடுகளை 25.06.2015 முதல் வழங்கி வருகிறது.

இந்தத் திட்டமானது, நான்கு முறைகளில் அமல் படுத்தப்படுகிறது. அதாவது, பயனாளிகள் தலைமையில் கட்டுமானம், கூட்டாக இணைந்து உரிய வீட்டுவசதியை வழங்குவது, குடியிருப்பு பகுதியில் குடிசைகள் மறுகட்டமைப்பு, கடன் அடிப்படையிலான மானியத் திட்டம் ஆகியவற்றின் மூலம் செயல்படுத்தப்படுகிறது.

மாநிலங்கள், யூனியன் பிரதேச அரசுகள் அளித்த திட்டப் பரிந்துரைகளின் அடிப்படையில், 22.07.2024 வரை பிரதமரின் நகர்ப்புற வீட்டுவசதித் திட்டத்தின் கீழ், 118.64 லட்சம் வீடுகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இதில், 114.33 லட்சம் வீடுகளின் கட்டுமானம் நடைபெறுகிறது. இவற்றில் 85.04 லட்சம் வீடுகளின் கட்டுமானம் நிறைவடைந்து பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. மீதமுள்ள வீடுகளுக்கான பல்வேறு கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

பிரதமரின் நகர்ப்புற வீட்டுவசதித் திட்டம் 31.12.2024 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. கடன் அடிப்படையிலான மானியத் திட்டம் தவிர்த்து ஏனைய வீடுகளை கட்டி முடிக்கும் வகையில், பிரதமரின் நகர்ப்புற வீட்டுவசதித் திட்டம் 31.12.2024 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

பிரதமரின் நகர்ப்புற வீட்டுவசதித் திட்டத்தின் கீழ் பயனாளர்களை அதிகமாக்க மேலும் 3 கோடி ரூபாய் உதவி வழங்க 10.06.2024 -இல் நடந்த ஒன்றிய அமைச்சரவை கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

நகரத்திலுள்ள 1 கோடி ஏழை மற்றும் நடுத்தர குடும்பங்கள் பயனடையும் வகையில் 10 லட்சம் கோடி ரூபாய் முதலீடு செய்யப்படும். பிரதமரின் நகர்ப்புற வீட்டுவசதித் திட்டம் 2.0 செயல்பாட்டுக்கு ஒன்றிய அரசின் உதவியாக 2.20 லட்சம் கோடி ரூபாய் 2024-25 பட்ஜெட்டில் ஒதுக்கப்பட்டுள்ளது.

பிரதமரின் வீட்டு வசதி- நகர்ப்புற திட்டத்தின் கீழ், திட்டம் தொடங்கியது முதல் மடிப்பாக்கத்தில் 603, சுண்ணாம்பு கொளத்தூரில் 190, பெரும்பாக்கத்தில் 33 வீடுகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இவற்றில் மடிப்பாக்கத்தில் 603 வீடுகள், சுண்ணாம்பு கொளத்தூரில் 179 வீடுகள், பெரும்பாக்கத்தில் 33 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு அமைச்சர் பதில் அளித்தார்.

குமரி மாவட்ட தேவசம் போர்டு கடைகள் ரூ.55 லட்சத்துக்கு ஏலம்!

மாவட்ட அறங்காவலர் குழுத் தலைவர் பிரபாஜி ராமகிருஷ்ணன் முன்னிலையில் நடைபெற்றது!

நாகர்கோவில், ஆக. 10-

கன்னியாகுமரி மாவட்டத்தில் தேவசம் போர்டு நிர்வகிக்கும் முக்கிய கோயில்களில் உள்ள பிரசாதம், பூ, மாலை விற்பனை உள்ளிட்ட ஏலக்கடைகள், நடத்துவதற்கு ஆண்டுதோறும் ஏலம் நடக்கும். மிகுந்த போட்டிகளுடன், ஏற்கனவே கன்னியாகுமரி பகவதி அம்மன் கோயில் பிரசாத ஸ்டால், நாகர்கோவில் நாகராஜா கோவில் பால் ஏலம், சுசீந்திரம் தாணுமாலயசாமி கோவில் உட்பிரகாரத்தில் உள்ள ஆஞ்சநேயருக்கான வெண்ணை சாத்துவதற்கான ஏலம் உள்ளிட்ட ஏலங்கள் ஏற்கனவே நடந்து முடிந்தன.

ஏலம் எடுக்காத சில கடைகள் இருந்தன. இதில் மண்டைக்காட்டில் உள்ள பிரசாதம் விற்பனை செய்யும் உரிமம் ரூ.8,10,000 ற்கும், நேர்ச்சை மரம் கை, கால் மண்டை விற்பனை செய்யும் உரிமம் 22,54,000 க்கும், பல மாற்று பொன், வெள்ளி, தகர கை, கால் உருவம் விற்பனை செய்யும் உரிமம் 14,53,001 க்கும், பொங்கல் வழிபாடு பொருட்கள் விற்பனை செய்யும் உரிமம் ரூ. 10,66,000க்கும், குமாரக்கோவில் முருகன் கோயிலில் உள்ள தேங்காய், பழம் தட்டு பூஜைப் பொருட்கள் விற்பனை செய்யும் உரிமம் ரூ.1,33,000க்கும் ஏலம் போனது.

இந்த ஏலம் குமரி மாவட்ட திருக்கோயில்கள் நிர்வாக அறங்காவலர் குழு தலைவர் பிரபா ஜி ராமகிருஷ்ணன் மற்றும் இணை ஆணையர் பழனிக்குமார் முன்னிலையில் சுசீந்திரத்தில் உள்ள அலுவலகத்தில் நடந்தது.

அறங்காவலர் குழு உறுப்பினர் துளசிதரன் நாயர், நாகர்கோவில் உதவி ஆணையர் தங்கம், நாகர்கோவில் தொகுதி ஆய்வாளர் சரஸ்வதி, மேலாளர் முருகன், கண்காணிப்பாளர் ஆனந்த் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஐ.பெரியசாமியின் தொகுதியான ஆத்தூர் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட சின்னாளப்பட்டி கிளை நூலகத்தை பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி 234/77 ஆய்வு திட்டத்தின் கீழ் 155ஆவது ஆய்வை மேற்கொண்டார். நூலகத்தில் புதிதாக கட்டப்பட்டுள்ள வாசிப்பு அரங்கத்தை பார்வையிட்டு வாசகர்களின் கோரிக்கையை கேட்டறிந்தார். தொடர்ந்து நூலகத்தின் சுற்றுப்புறத்தை தூய்மையாக வைத்திருக்க நடவடிக்கை எடுக்குமாறு வாசகர்கள் வைத்த கோரிக்கையின் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதி அளித்தார்.

திண்டுக்கல்லில் தலைவர் கலைஞர் அவர்களின் 6ஆம் ஆண்டு நினைவு நாளினை முன்னிட்டு அமைதிப்பேரணி நடைபெற்றது. திண்டுக்கல் மாவட்ட கழக அலுவலகம் முன்பு கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு திண்டுக்கல் கிழக்கு மற்றும் மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் கிழக்கு மாவட்ட கழகச் செயலாளர் ஐ.பி.செந்தில்குமார் எம்.எல்.ஏ. மாலை அணிவித்து மரியாதை செய்தார். உடன் வேடசந்தூர் சட்டமன்ற உறுப்பினர் ச.காந்திராஜன், மாவட்ட அவைத்தலைவர் மூ.காமாட்சி, துணைச் செயலாளர்கள் ஆ.நாகராஜன், சி.இராஜாமணி, ம.மார்கரெட் மேரி, மு.பிலால் உசேன், மேயர் இளமதி ஜோதிபிரகாஷ், மாநகரச் செயலாளர் ச.ராஜப்பா, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஆண்டி அம்பலம், இளைஞர் அணி, மாணவர் அணி அமைப்பாளர்கள் ம.கணேசன், கி.பிரபாகரன் உள்பட கிழக்கு மற்றும் மேற்கு மாவட்ட, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், கிளை மற்றும் வார்டு நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் உள்ளிட்ட ஏராளமான தொண்டர்கள் கலந்து கொண்டனர்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, நீலகிரி மாவட்டம், கோத்தகிரி கன்னேரிமுக்கு பகுதியில் அமைந்துள்ள ஜான் சல்லிவன் பூங்காவினை சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் நேற்று முன்தினம் (08.08.2024) நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்.

தமிழ்நாட்டு மாணவர்கள் கல்வியில் மேம்பட வேண்டும் என்ற உயரிய நோக்கில்

எண்ணற்ற திட்டங்களை வழங்கி வருகின்றார் முதல்வர்!

பள்ளி மாணவ – மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகளை வழங்கி அமைச்சர் சா.சி.சிவசங்கர் பேச்சு!

பெரம்பலூர், ஆக.10-

பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் நிகழ்ச்சி, குன்னம் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்றது .

போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், மாவட்ட ஆட்சித்தலைவர் கிரேஸ் பச்சாவ் தலைமையில் தொடங்கி வைத்தார்.

பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் ம.பிரபாகரன் முன்னிலை வகித்தார்.

இதில் போக்குவரத்துத் துறை அமைச்சர் தெரிவித்ததாவது,

அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகள், ஆதிதிராவிடர் நலப்பள்ளிகளில் மேல்நிலை வகுப்பு பயிலும், மாணவ மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகள் தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்டு வருகின்றது. அந்த வகையில், நமது பெரம்பலூர் மாவட்டத்தில் 46 பள்ளிகளைச்சேர்ந்த 2,294 மாணவர்களுக்கும், 2,602 மாணவிகளுக்கும் என மொத்தம் 4,896 மாணவ மாணவிகளுக்கு ரூ.2,36,26,120 மதிப்பிலான மிதிவண்டிகள் இலவசமாக வழங்கப்படவுள்ளது.

இதன் தொடக்கமாக இன்று குன்னம் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் பயிலும் 146 மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகள்

வழங்கப்பட்டுள்ளது.

மாணவ மாணவிகளின் கல்வி மேம்பாடு அடைவதற்காக நமது மாநிலத்தில் செயல்படுத்தப்படும் திட்டங்களைப்போல வேறு எந்த மாநிலத்திலும் செயல்படுத்தப்படுவதில்லை. மக்கள் நலத்திட்டங்களை வழங்குவதில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இந்தியாவிற்கே முன்னோடியாக விளங்குகின்றார்.

தமிழ்நாட்டில் பெண் பிள்ளைகள் உயர்கல்வி பயில பொருளாதாரம் அவர்களுக்கு ஒரு தடையாக இருக்கக்கூடாது என்ற உயரிய நோக்கத்தில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அரசுப் பள்ளிகளில் 6 முதல் 12 ஆம்வகுப்பு வரை பயின்று உயர்கல்வி பயிலும் மாணவிகளுக்கு மாதம் ரூட.1000 வழங்கும் "புதுமைப்பெண்" என்ற திட்டத்தை அறிவித்து சிறப்பாக செயல்படுத்தி வருகின்றார். தற்போது, மாணவர்களுக்கும் இத்திட்டத்தை "தமிழ்ப்புதல்வன்" என்ற பெயரில் அடுத்த மாதம் தொடங்கி வைக்க உள்ளார்.

கல்வி ஒன்றுதான் ஒருவரின் வாழ்க்கையினை முன்னேற்றும், இதுகுறித்து முதலமைச்சர் அவர்கள் குறிப்பிடும்போது, "படிக்காவிட்டால் என்ன, படிக்காதவர்களும் நாட்டில் முன்னேறியுள்ளார்கள், நாட்டை வழி நடத்தியுள்ளார்கள் என சிலர் உங்களுக்கு அறிவுரை சொல்வார்கள். உங்களின் கல்விக்கனவிற்கு முட்டுக்கட்டை போடுபவர்களுக்கு சொல்லுங்கள், படிக்காமல் சாதித்த ஒருவரை நீங்கள் சொன்னால், படிப்பால் சாதித்த நூறு பேரை என்னால் சொல்ல முடியும்" ஆகவே, கல்வி தான் ஒருவரை சமுதாயத்தில் உயர்ந்தவராக மாற்றும் என்பதை மனதில் வைத்துக்கொள்ளுங்கள்.

உங்களின் நலன்கருதி திட்டங்களை வழங்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நீங்கள் செய்யும் கைமாறு என்ன தெரியுமா, நன்றாக படிக்க வேண்டும். படித்து நல்ல மனிதர்களாக, சாதனையாளர்காக வாழ்வில் உயர வேண்டும் என்பதுதான்.

நேற்று இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் திருச்சி மாவட்டம் பச்சைமலையில் உள்ள ஒரு மாணவியின் வீட்டிற்கு சென்றார். அவர் வசிக்கும் இடத்தில் செல்போன் டவர் கூட கிடைக்காத சூழல். முறையான அடிப்படை வசதிகள் இல்லாத நிலையில், அந்த பழங்குடியினை மாணவி படித்து, NIT என்று சொல்லக்கூடிய தேசிய தொழில்நுட்பக்கழகத்தில் படிப்பதற்கு வாய்ப்பு பெற்றிருக்கின்றார். அவரைப் பாராட்டுவதற்காகவே, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் அவர்கள் அங்கு வந்தார். அந்த மாணவியின் கல்விதான் அவரை அங்கு வரவழைத்தது. அவருக்கு தேவையான அனைத்து உதவிகளையும் அரசு செய்யும் என உறுதி வழங்கினார்.

எனவே, கல்வி ஒன்றுதான் நம்மிடமிருந்து யாரும் பிரிக்க முடியாத சொத்து, நம்மை சமுதாயத்தில் உயர்ந்தவர்களாக்கும் ஒரே வழி என்பதை மாணவிகள் மனதில் வைத்து நன்கு படிக்க வேண்டும்.

என்று அமைச்சர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் முதன்மைக்கல்வி அலுவலர் (பொ) அண்ணாதுரை, வேப்பூர் ஊராட்சி ஒன்றியக்குழுத்தலைவர் பிரபா செல்லப்பிள்ளை, மாவட்ட ஊராட்சிக்குழு துணைத் தலைவர் முத்தமிழ்ச் செல்வி மதியழகன், ஆதிதிராவிடர் நலம் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் வி.வாசுதேவன், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் ரெ.சுரேஷ் குமார், ஆட்மா தலைவர்கள் வீ.ஜெகதீசன், சி.இராஜேந்திரன், மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர்கள் தழுதாழை.பாஸகர், டாக்டர் அ.கருணாநிதி, ஊராட்சி ஒன்றியக்குழு துணைத்தலைவர் செல்வராணி, குன்னம் ஊராட்சி மன்றத்தலைவர் ம.தனலட்சுமி உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

கோவில்பட்டி நகர தி.மு.க. செயல்வீரர்கள் கூட்டம்!

நாள் : 11.08.2024 ஞாயிற்றுக்கிழமை, காலை 10.00 மணி.
இடம் : ஆர்த்தி மஹால், கோவில்பட்டி..
தலைமை : பி.எம். முனியசாமி, நகர அவைத் தலைவர்,
முன்னிலை : எம்.டி.ஏ.காளியப்பன், ச.அன்பழகன், தா.உலகராணி, வி.சி.ராமமூர்த்தி, (நகர துணைச் செயலாளர்கள்) (நகர பொருளாளர்)
செ. ரவீந்திரன், எஸ்.புஷ்பராஜ், கோ. மாரிசாமி (மாவட்ட பிரதிநிதிகள்)
வரவேற்புரை : கா. கருணாநிதி – கோவில்பட்டி நகரச் செயலாளர்,
சிறப்புரை : பி.கீதாஜீவன்
சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர்,
தூத்துக்குடி வடக்கு மாவட்ட செயலாளர்

கூட்டத்தில் தூத்துக்குடி வடக்கு மாவட்டக் கழக நிர்வாகிகள், கோவில்பட்டி நகரத்திற்கு உட்பட்ட தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், கழக சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், நகர கழக வார்டு செயலாளர்கள், பிரதிநிதிகள், வார்டு கழக நிர்வாகிகள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், சிறப்பு அழைப்பாளர்கள், கழக செயல்வீரர்கள் அனைவரும் இதனையே அழைப்பாக ஏற்று தவறாது கலந்து கொள்ளக் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள் : கழக வளர்ச்சிப் பணிகள் குறித்து

(பி. கீதாஜீவன்)
சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சர்
தூத்துக்குடி வடக்கு மாவட்ட செயலாளர்

தமிழ்நாட்டில்

காவல் துறை அதிகாரிகள் பணியிட மாற்றம்!

சென்னை, ஆக.10-

தமிழகத்தில் 56 காவல் துறை அதிகாரிகளை பணியிட மாற்றம் செய்து தமிழ்நாடு அரசு உத்தரவிட்டது

தமிழ்நாடு முழுவதும் உள்ள 24 ஐபிஎஸ் அதிகாரிகள் பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளனர். பல்வேறு மாவட்டங்களின் காவல் கண்காணிப்பாளர்களை பணியிட மாற்றம் செய்து தமிழக அரசு உத்தரவிட்டது

அதன்படி, மதுரை தெற்கு மண்டல அமலாக்கத்துறை காவல் கண்காணிப்பார் சுஜித் குமார், சென்னை துணை ஆணையராக இட மாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

சென்னை மத்திய குற்றப்பிரிவு துணை ஆணையராக இருந்த நிஷா, நீலகிரி மாவட்ட காவல் கண்காணிப்பாளராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

திருப்பத்தூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆல்பர்ட் ஜான், தூத்துக்குடி மாவட்ட காவல் கண்காணிப்பாளராக நியமனம் செய்யப்பட்டுள்ளார். திருவல்லிக்கேணி காவல் துணை ஆணையராக செல்வரத்தினம் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதனைத் தொடர்ந்து, மேலும் 32 காவல் துறை உயர் அதிகாரிகளை பணியிட மாற்றம் செய்து தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

மாநில மனித உரிமைகள் ஆணையரக காவல் கண்காணிப்பாளராக ஜெயலட்சுமி நியமனம் செய்யப்பட்டுள்ளார். கோவை தீவிரவாத தடுப்புப்பிரிவு காவல் கண்காணிப்பாளராக வி.பத்ரி நாரயணன் நியமனம் செய்யப்பட் டுள்ளார்.

சென்னை ரயில்வே காவல் கண்காணிப்பாளராக புளியந்தோப்பு துணை ஆணையர் ஈஸ்வரன் பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளார்.